முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

அ.வ. எண். 301/2018

| | | |
|---|---|---|
| பிரதிவாதி தரப்பு சாட்சி | .. | 2 |
| பெயர் | .. | வனராணி |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | துரைசாமி |
| வயது | .. | |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | |
| வட்டம் | .. | |

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27ஆம் நாள் திங்கட்கிழமை திரு. நா. சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

வாதி உஷா நந்தினி எனக்கு தம்பி மகள் ஆவார். உஷா நந்தின் தாக்கல் செய்த சொத்து விவரத்தின் அளவு 2 ஏக்கர். ருத்தரமூர்த்தி, கோபால் மற்றும் திருவேங்கடம் ஆகியோர்கள் பெயர்களில் தாவா சொத்து உள்ளது. மேற்படி 3 நபர்களின் பெயரில் தாவா சொத்து உள்ளது என்பதற்கான ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. பி.த.சா.ஆ.19 ஆவணம். சுப்பிரமணிய நாயக்கர் என்பவருக்கு அடமானம் நான் அடமானம் வைத்தேன். அந்த அடமான ஆவணத்திற்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை. அது அப்படியே இருக்கிறது. அசல் அடமான பத்திரம் (பி.த.சா.ஆ.19) என்னிடம் தான் உள்ளது. பாலசுப்ரமணியம் என்னுடைய மகன் என்றால் சரிதான். என் மகன் சுப்ரமணிய நாயக்கர் என்பவருக்கு கிரையம் கொடுத்ததாக சொல்லும் பத்திரத்தை பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். பி.த.சா.ஆ.18 அடமான பத்திரமும் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வாதியின் கணவர் ருத்தரமூர்த்திக்கு நான், எனது மகன், கோவிந்தம்மாள் மற்றும் முனியம்மாள்

ஆகியோர் 2006 ஆம் ஆண்டு காவேரிபாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரையம் எழுதிகொடுத்தோம் என்று சொன்னால் சரிதான். ருத்தரமூர்த்தி விபத்தில் இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். ருத்தரமூர்த்தி இறந்தபிறகு அவரது வாரிசுகளான மனைவி, 2 பெண்பிள்ளைகள் மற்றும் ஒரு ஆண் ஆகியோர் தாவா இடத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி கிரையத்திற்கு நாங்கள் பணம் வாங்கவில்லை என்று சொல்வது வழக்கிற்காக சொல்லப்படும் பொய் என்றால் சரியல்ல. வாதிக்கும் எங்களுக்கும் விரோதம் என்று சொன்னால் இல்லை. நாங்கள் கிரையம் செய்து கொடுத்து சுமார் 19 வருடங்கள் ஆகிறது என்று சொன்னால் சரிதான். வாதி இடத்தில் தான் கோபால் மற்றும் திருவேங்கடம் வீடுகட்டியுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். ஆனால் அது பொது சொத்து, நான் பிரதிவாதிகள் கட்டியுள்ள சொத்தை பொது சொத்து என்று சொல்வது பிரதிவாதிகளுக்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ருத்தரமூர்த்தி என்பவர் என் சகோதரர்களை நான் பார்த்துக்கொள்கிறேன் என்னுடைய பெயரில் பதிவு செய்து கொடுத்துவிடுங்கள் என்று சொன்னதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனக்கு சொத்தை பற்றி எதுவும் தெரியாது என்றும் நான் பிரதிவாதிகளுக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்களை ஏமாற்றி கிரையம் செய்ததாக சொல்லியுள்ள நிலையில் அது சம்மந்தமாக சட்ட நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை. என் மகன் இறந்துவிட்டார் அதனால் எடுக்கவில்லை.

மறுவிசாரணை

இல்லை.